(ஆ) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 9/74) சட்டமன்ற மேலவையில் 16—3—1974-ம் நாளன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது, மாலை 4 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

(இடைவெளிக்குப் பிறகு)

இடைவேளைக்குப்பின் மாலை 4 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

*திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மான்யத்தின் மீது என்னுடைய அம்பா சமுத்திரம் பகுதியில் உள்ள சில முக்கியமான பிரச்சினைகளை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

என்னுடைய பகுதியிலே தாம்பரபரணி நதியின் வடக்கு கோடை மேல் அழகியன்கால் பாசனம் மூலம் பயன் அடையும் கீழ்ப்பாசனத்துக்கு நீண்ட காலமாகப் போதிய தண்ணீர் கிடைக்காமல் அடிக்கடி விவசாயம் பாதிக்கப்பட்டு வருகிறது என்பதையெல்லாம் அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறேன். மேலும், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் கூட்டத்தில் இந்த விஷயத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று